இந்தியாவில் இதுவரை நடத்தப்படாத மாநாடு!

சமூக வலைதளப் பதிவில் - கழகத் தலைவர் பெருமிதம்!

சேலம், ஜன. 23 -

சேலத்தில் கழக இளைஞர் அணியின் இரண்டாவது மாநில எழுச்சி மாநாடு நிறைவுற்ற பின்னர் சமூக வலைதளப் பதிவிட்ட கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், "இந்தியாவில் இதுவரை நடத்தப்படாத மாநாடு இது!" எனப் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைத் தளப்பதிவு வருமாறு:-

"இந்தியாவில் இதுவரை நடத்தப்படாத மாநாடு!

9 லட்சம் சதுர அடி பரப்பளவில் அமைக்கப் பட்ட பிரமாண்டமான மாநாட்டு அரங்கத்தைச் சுற்றிலும் 5 லட்சம் உடன்பிறப்புகள் கலந்து கொள்ள; மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றுள் ளது.

கழகத் தோழர்கள் அனைவரும் பாதுகாப் பாக வீடு திரும்புமாறு கேட்டுக் கொள்கிறேன்!

இவ்வாறு அப்பதிவில் - கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் மேலும் 290 பேருக்கு கொரோனா பாதிப்பு:

புதுடெல்லி, ஜன. 23 -

கொரோனாவின் புதிய வகையான 'ஜேஎன்.1' வகை தொற்று, பல்வேறு நாடுகளில் பரவி வருகிறது. இந்த வகை கொரோனா வேகமாகப் பரவுவதோடு, நோய்த் தடுப் பாற்றலையும் ஊடுருவுமென கூறப்படுகிறது. கடந்த சில வாரங்களாக ஜே.என்.1 வகை உருமாறிய கொரோனா வைரஸ் இந்தியாவிலும் பரவ ஆரம்பித்தது.

இந்தியாவில் நேற்று முன்தினம் 290 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. இதுவரை கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்கள் மொத்த எண்ணிக்கை 4 கோடியே 50 லட்சத்து 23 ஆயிரத்து 751 ஆக உயர்ந்தது. இதுவரை கொரோனாவில் இருந்து 4 கோடியே 44 லட்சத்து 88 ஆயிரத்து 258 பேர் குணமடைந்துள்ளனர்.

கொரோனா சிகிச்சை பெறுவோர் எண்ணிக்கை 2 ஆயிரத்து 41ல் இருந்து 2 ஆயிரத்து 59 ஆக அதிகரித்தது. கொரோனாவுக்கு கேரளாவில் 4 பேர், மராட்டியம் மற்றும் உத்தரபிரதேசத்தில் தலா ஒருவர் என 6 பேர் பலியானார்கள். மொத்த பலி எண்ணிக்கை 5 லட்சத்து 33 ஆயிரத்து 434 ஆக அதிகரித்தது.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், கழக இளைஞர் அணி 2வது மாநில மாநாட்டில் கழகக் கொடியினை ஏற்றி வைத்த கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.க்கு பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கிய காட்சி.

திண்டுக்கல் மாவட்டத்தில் வாக்காளர் சரிபார்த்தல் பணி!

மாவட்டச் செயலாளர்கள் - அமைச்சர் அர.சக்கரபாணி - ஐ.பி.செந்தில்குமார் எம்.எல்.ஏ. வேண்டுகோள்!

திண்டுக்கல், ஜன. 23 -

திண்டுக்கல் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் அர.சக்கரபாணி, கிழக்கு மாவட்டச் செயலாளர் ஐ.பி.செந்தில்குமார் ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

இந்திய தேர்தல் ஆணையம் 01.01.2024ஐ தகுதி நாளாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட 2024ம் ஆண்டிற்கான வாக்காளர் பட்டியலை 22.01.2024 அன்று வெளியிட்டுள்ளது. இந்தவாக்காளர் பட்டியல் திண்டுக்கல் மாவட்டத்திலுள்ள அனைத்து வாக்குச் சாவடி மையங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

மேலும் கழக உடன்பிறப்புகளின் பார்வைக்காக அனைத்து ஒன்றிய, மாநகர, நகர, பகுதி, பேரூர் செயலாளர்கள் அனைவரிடமும் வாக்காளர் பட்டியல் பிரித்து வழங்கப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி வாக்காளர்கள், தங்களின் பெயர் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றுள்ளதை சரிபார்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் இந்த பட்டியலில் பெயர் இடம் பெறாதவர்கள் அனைத்து தாலுகா அலுவலகங்கள், இ-சேவை மையங்கள் மற்றும் ஆன்லைனில் புதிதாக விண்ணப்பித்து தங்களது பெயரினை வாக்காளர் பட்டியலில் சேர்த்திடும் இப்பணியில் திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, மாநகர, நகர, பேரூர், கிளை மற்றும் வார்டு கழகச் செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் சார்பு அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கழக உடன்பிறப்புகள் மற்;றும் வாக்குச்சாவடி நிலை முகவர்கள் (பி.எஸ்.ஏ.2)என அனைவரும் இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு, விடுபட்ட அனைத்து பொதுமக்களையும் வாக்காளர்களாக சேர்க்க உரிய நட வடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அவதூறான பொய்ச்செய்தி வெளியிட்ட தினமலர் மீது சட்ட நடவடிக்கை!

சிறப்பு பூஜைகள் - அன்னதானம் நடத்திட எங்கும் தடை விதிக்கவில்லை!

தமிழ்நாடு அரசு வன்மையான கண்டனம்!

சென்னை, ஜன. 23 -

"சிறப்புப் பூஜைகள், அன்னதானம் நடத்திட எங்கும் தடை விதிக்கப்படவில்லை. பொய்ச்செய்தி வெளியிட்ட தினமலர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது.

இது குறித்து தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

உத்தரப்பிரதேச மாநிலம் அயோத்தியில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள ராமர் கோயிலுக்கு குடமுழுக்கு விழா இன்று திங்கட்கிழமை நடைபெறுகிறது. அதனையொட்டி, தமிழ்நாட்டு கோயில்களில் சிறப்பு பூஜைகளும், அன்னதானமும் நடத்துவதற்கு தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறை வாய்மொழியாக தடைவிதித்துள்ளது என தினமலர் நாளிதழில் தவறான செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

ஆலயப் பணிகளை அனைவரும் போற்றும் வகையில் நிறைவேற்றி வரும் தமிழ்நாடு அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்திடும் தீயநோக்கத்துடன் உண்மைக்கு மாறான செய்தியை வெளியிட்டு, பொதுமக்களிடையே குழப்பத்தை ஏற்படுத்தி, அரசு மீது வெறுப்பைத் தூண்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தினமலர் நாளிதழின் இச்செயல் மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான தமிழ்நாடு அரசு 2021ல் பொறுப்பேற்றது முதல் இந்து சமய அறநிலையத்துறையின் பணிகளில் ஒரு சிறு குறையும் ஏற்படக் கூடாது என்பதில் மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. சுமார் 400 ஆண்டுகளுக்குப் பின், கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஆதிகேசவ பெருமாள் திருக்கோயில் உட்பட 1,270 திருக்கோயில்களுக்கு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு குடமுழுக்கு விழாக்கள் மிகச்சிறப்பாக நடைபெற்றுள்ளன.

இந்து சமய அறநிலையத் துறையின் மூலம் 764 திருக்கோயில்களில் நாள்தோறும் அன்னதானம் வழங்கும் பணிகள் நடைபெற்று பக்தர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

கோவில்கள் புனரமைப்பு!

ஆயிரம் ஆண்டுகள் தொன்மையான திருக்கோயில்களை புனரமைத்திடும் வகையில் 2022-23ஆம் நிதியாண்டில் 113 திருக்கோயில்கள் ரூ.154.90 கோடி மதிப்பீட்டிலும், 2023-24 ஆம் நிதியாண்டில் 84 திருக்கோயில்கள் ரூ.149.95 கோடி மதிப்பீட்டிலும் புனரமைத்துப் பாதுகாக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்து சமய வழிபாட்டு உணர்வுகளில் ஊறியுள்ள தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் இந்த உண்மை புரியும். மாற்றுக் கருத்துடைய எதிர்க்கட்சிகள் கூட இதனை மறுக்க முடியாது.

'தினமலர்' மீது சட்ட நடவடிக்கை!

இந்நிலையில் திருக்கோயில் பணிகளை மிகச்சிறப்பாக நிறைவேற்றி, நாள்தோறும் மக்களின் பாராட்டுகளைப் பெற்றுவரும் தமிழ்நாடு அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் வேண்டுமென்றே அப்பட்டமான உள்நோக்கத்துடன் பொய்ச்செய்தியை வெளியிட்டுள்ள செயல் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும். இத்தகைய தவறான, உண்மைக்குப் புறம்பான செய்தியை வெளியிட்ட தினமலர் நாளிதழ் மீது தமிழ்நாடு அரசு சார்பில் சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

டாவோஸில் உலகப் பொருளாதார மன்றத்தின் 54வது வருடாந்திர கூட்டம்!

தமிழ்நாடு அரசு, தனது பங்களிப்பை வெற்றிகரமாக பதிவு செய்தது!

அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் பிரதிநிதிகள் குழு பங்கேற்பு!

பெர்ன், ஜன. 23 -

சுவிட்சர்லாந்து - டாவோஸில் உலகப் பொருளாதார மன்றம் - 2024 என்பது தமிழ்நாடு பிரதிநிதிகள் குழுவின் வெற்றியை குறிக்கிறது.

"நம்பிக்கை மீட்டெடுப்பு" (rebuilding trust) என்ற கருவோடு நடைபெற்ற உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) 54வது வருடாந்திர கூட்டம் 2024 இல் தமிழ்நாடு அரசு தனது பங்களிப்பை மிக வெற்றிகரமாக பதிவு செய்துள்ளது.

தமிழ்நாடு அரசின் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் தொழில்துறை, முதலீட்டுத் துறை அமைச்சர் டாக்டர் டி.ஆர்.பி. ராஜா, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக செயலாளர் அருண் ராய், வி.விஷ்ணு and CEO of Guidance Tamil Nadu அவர்கள் ஆகியோர் உலகளாவிய கூட்டாண்மைகளை வளர்ப்பதற்கும் தமிழ்நாட்டின் அர்ப்பணிப்பு மற்றும் தனித்துவமான ஆட்சிமுறையை வெளிப்படுத்தவும் டாவோசில் திராவிட மாடல் அரசின் மாதிரிகளை காட்சிப்படுத்தினர்.

உயர்மட்ட உலகளாவிய நிறுவனங்கள் மற்றும் அரசாங்கங்களின் பிரதிநிதிகளுடனான சந்திப்புகள், பேச்சு வார்த்தைகள், நெட்வொர்க்கிங் நிகழ்வுகள் மற்றும் உடனடி நேர் காணல்கள் போன்ற 50க்கும் மேற்பட்ட கலந்துரையாடல்களில் பிரதி நிதிகள் குழு ஈடுபட்டுள்ளது.

பிரதிநிதிகள் குழு சந்தித்த குறிப்பிடத்தக்க நிறுவனங்கள் Rockwell Automation, Vestas, Valeo, SwissRe, Mitsubishi Electric, HP, Accenture, Schneider Electric, Maersk, Hitachi Energy, Geox போன்ற பல நிறுவனங்களை சந்தித்தன. மேலும் IT, Automobile, Renewables, Electronics, GCC, Investment Funds, Footwear, Healthcare, and Life Sciences., போன்ற பல்வேறு துறைகளையும் சந்தித்தனர்.

டாக்டர் டி.ஆர்.பி. ராஜா கூறுகையில், "WEF 2024 இல் எங்கள் பங்கேற்பு என்பது உலகப் பொருளாதாரப் பாதையில் தமிழ்நாட்டின் வளர்ச்சிப் பாதையை இணைத்து சீரமைக்க இந்தச் சந்திப்புகள் ஒரு முக்கிய அடியாக இருக்கும், இந்த புதிய உறவுகளை மேம்படுத்துவதற்கு நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றும் மேலும் இச்சந்திப்பு பல்வேறு துறைகளில் மாநிலத்தின் வளர்ச்சிக்கு ஊக்கமளிக்கும்." எனவும் கூறினார்.

அருண் ராய் கூறுகையில், இந்த பிரதிநிதிகள் குழுவின் முக்கியமான நோக்கமாக "புதிய உறவுகளை உருவாக்குவதும், ஏற்கனவே உள்ள உறவுகளை வலுப்படுத்துவதாகவும் இருந்தது, மேலும் முதலீட்டிற்காக வளர்ந்து வரும் துறைகளை ஆராய்ந்து புதுமையான சிந்தனைகளை சேகரிக்கவும், வணிகத் தலைவர்கள் மற்றும் CXO க்களுடன் இருதரப்பு சந்திப்புகள் மூலம் தமிழ்நாட்டை பொருளாதாரத்தில் உயர்த்துவதாகும். இனி வரும் மாதங்களில் தமிழ்நாடு முதலீட்டாளர்களுக்கான சிறந்த இடமாக இருக்கும்" எனவும் கூறினார்.

தமிழ்நாடு நிர்வாக இயக்குனர் மற்றும் தலைமை நிர்வாக அதிகாரி வி. விஷ்ணு கூறுகையில், மாநிலத்தில் புதிய முதலீடுகளுக்கான பல வலுவான வழிகளை நாங்கள் உருவாக்கினோம், மேலும் வரவிருக்கும் மாதங்களில் வழக்கமான பின்தொடர்தல்கள் மூலம் முதலீடுகளை பாதுகாப்போம் எனவும் நம்பிக்கை உள்ளது என கூறினார்.

செயல்பாட்டு மையமாக திகழும் தமிழ்நாடு பெவிலியன் இரண்டு நிறைவான நிகழ்வுகளை நடத்தியது R&D, புத்தாக்கம் மற்றும் அறிவுப் பொருளாதாரம் ஆகியவற்றின் கூட்டாண்மையில் கவனம் செலுத்துகிற இந்தியாஸ் போரா, சுவிஸ் இந்தோ சேம்பர் போன்ற முக்கிய அமைப்புகளுடன் வர்த்தகம், PwC மற்றும் முன்னணி நிறுவனங்கள். மேலும் பெவிலியனில் பொங்கல் விழாவும் நடைபெற்றது.

பிரதிநிதிகள் குழு தலைமையில் நடைபெற்ற முக்கிய பேச்சு அமர்வுகளில் Qualcomm, Analog Device, Hitachi, Borgwarner, RGP Group போன்ற நிறுவனங்களுடன் உற்பத்தியின் எதிர்காலம் குறித்து பலகட்ட விவாதங்கள் இடம்பெற்றன. "SMEகள் மூலம் உலகளாவிய பொருளாதாரங்களை வலுப்படுத்துதல்" என்ற கருத்தின் அடிப்படையில் இக்குழு ஆய்வு செய்தது. பொது - தனியார் கூட்டாண்மை மாதிரிகள் மேம்பட்ட நிலையில் SME களை ஆதரிக்கவும் உற்பத்தி மற்றும் "புதியதில் போட்டித்தன்மைக்கான பாதைகளை வகுக்கவும் நுண்ணறிவுடன் இந்தச் சந்திப்பை அணுகியது" பிரதிநிதிகள் குழு.

இந்த ஆண்டு WEF என்பது நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை நிலைத்தன்மை, மற்றும் பொறுப்புக்கூறல் - நெருக்கமாக இணைந்த கொள்கைகள் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.

மேலும் அனைவரையும் உள்ளடக்கிய தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கான தொலைநோக்குப் பார்வையாகும்.

ஒட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய செயலாளரும், ஒட்டப்பிடாரம் ஒன்றிய துணைத் தலைவருமான காசி விஸ்வநாதன் இல்லத் திருமண விழாவில் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் ஜி.வி.மார்க்கண்டேயன் மணமக்கள் ஸ்டாலின் - திருமதி.நந்தினி தம்பதியினரை வாழ்த்தினார். உடன் விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இமானுவேல், விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் உள்ளிட்டோர் இருந்தனர்.

மாநாட்டில், படை திரண்ட பட்டாளமாய் பங்கேற்ற இலட்சக்கணக்கான இளைஞர்கள்!

ஒன்றிய பா.ஜ.க.வின் சர்வாதிகார போக்கை வீழ்த்த சூளுரை!

'தினகரன்' நாளேடு தலையங்கம்!

சென்னை, ஜன. 23 -

தி.மு.க. இளைஞர் அணி மாநாட்டில் படை திரண்ட பட்டாளமாய் லட்சக்கணக்கான இளைஞர்கள் பங்கேற்றனர் என்றும் மாநாட்டில், ஒன்றிய பா.ஜ.க.வின் சர்வாதிகார போக்கை வீழ்த்த சூளுரைக் கப்பட்டது என்றும் 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதுகுறித்து 22.1.2024 தேதிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட் டுள்ளதாவது.

இளைஞரணி மாநாடு எதிர்பார்த்த படியே தமிழ்நாடு மக்களின் உரிமைகள் மீட்பதற்கான எழுச்சி மாநாடாக நடந்து முடிந்துள்ளது. சேலம் பெத்தநாயக்கன்பாளையத்தில் இளைஞர்களின் எழுச்சியோடு, வரலாற்றுச் சிறப்பு மிக்க மாநாடு நேற்று நடந்தது. கோட்டை போல முகப்பு வடிவம், தி.மு.க. வரலாற்றை விளக்கிடும் வண்ண ஓவியங்கள், திரும்பிய பக்கமெல்லாம் எல்.இ.டி. திரைகள், கொள்கை முழக்கங்கள் என தொண்டர்களின் எதிர்பார்ப்பு களை நிறைவேற்றும் வகையில் இளை ஞரணி மாநாடு நிறைவு பெற்றுவிட்டது. தி.மு.க. மாநாடு என்றாலே அதில் நிறைவேற்றப்படும் தீர் மானங்கள் இந்திய அளவில் விவாதிக்கப் படும்.

தினகரன்

துணைவரி 22, 2024 திங்கட்கிழமை

படை திரண்ட பட்டாளம்

திமுக இளைஞரணி மாநாடு எதிர்பார்த்த படியே தமிழ்நாடு மக்களின் உரிமைகள் மீட்பதற்கான எழுச்சி மாநாடாக நடந்து முடிந்துள்ளது. சேலம் பெத்தநாயக்கன்பாளையத்தில் இளைஞர்களின் எழுச்சியோடு, வரலாற்று சிறப்பு மிக்க மாநாடு நேற்று நடந்தது. கோட்டை போல முகப்பு வடிவம், திமுக வரலாற்றை விளக்கிடும் வண்ண ஓவியங்கள், திரும்பிய பக்கமெல்லாம் எல்இடி திரைகள், கொள்கை முழக்கங்கள் என தொண்டர்களின் எதிர்பார்ப்புகளை நிறை வேற்றும் வகையில் இளைஞரணி மாநாடு நிறைவு பெற்றுவிட்டது. நிமுக மாநாடு என்றாலே அதில் நிறைவேற்றப்படும் தீர்மானங்கள் இந்திய அளவில் விவாதிக்கப்படும். அந்த வகையில் திமுக இளைஞரணி செயலாளர் உதயநிதி

அந்த வகையில் தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் மொத்தம் 25 தீர்மானங்களை வாசித்து நிறைவேற்றி தந்தார். இந்தியாவின் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு இன்று திகழும் நிலையில், மகளிர் வாழ்வில் தன்னம்பிக்கையை வளர்க்க நகர பேருந்துகளில் கட்டணமில்லாத பயணம், கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டம், அரசு பள்ளிகளில் காலை உணவு திட்டம், கல்லூரி மாணவிகளுக்கு புதுமை பெண் திட்டம், மக்களை தேடி மருத்துவ திட்டம், அரிசிஅட்டைதாரர்களுக்கு பொங்கல் தொகுப்பு என நல்ல பல திட்டங்களை தமிழகத்திற்கு அள்ளி தந்த முதல்வருக்கு இளைஞரணி மாநாட்டில் நன்றி தெரிவித்து தனித்தனி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கிண்டியில் கலைஞர் பன்னோக்கு மருத்துவமனை, திருவாரூரில் கலைஞர் கோட்டம், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், சென்னை கிளாம்பாக்கத்தில் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம், மதுரை அலங்காநல்லூரில் கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல் அரங்கம் என கலைஞர் வழியில் அவரது புகழை போற்றி வரும் தி.மு.க., தொடர்ந்து அவரது வழியில் மொழி, இன உணர்வோடு பயணத்தை தொடர இளைஞரணி மாநாட்டில் உறுதி மொழி எடுக்கப்பட்டது.

இந்தியாவின் விளையாட்டு தலைநகரமாக இன்று சென்னை உருவாகி வரும் நிலையில், செஸ் ஒலிம்பியாட் போட்டி, கேலோ இந்தியா போட்டிகள் ஆகியவற்றை திறம்பட நடத்தி இளைய சமுதாயத்தின் விளையாட்டு திறனை மேம்படுத்தும் நடவடிக்கைகளுக்கும் மாநாட்டில் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் உரிமைகளை பறிக்கும் ஒன்றிய அரசுக்கு மாநாட்டில் கண்டனம் தெரிவிக்கவும் தயக்கம் காட்டவில்லை. தேசிய கல்வி கொள்கைக்கு தொடர்ந்து எதிர்ப்பு, நீட் தேர்வுக்கு விலக்கு பெற்றே ஆக வேண்டியதன் அவசியம், ஒன்றிய பா.ஜ. அரசின் பழிவாங்கும் அரசியல் ஆகியவை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு மாநாட்டில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரம் கேட்டும், ஆளுநர் பதவியை நிரந்தரமாக நீக்க கோரியும் தீர்மானங்கள் ஒருமித்த கருத்தோடு நிறைவேற்றப்பட்டுள்ளன. கல்வியை காவிமயமாக்க பா.ஜ. அரசு முயற்சித்து வரும் நிலையில், முதல்வரே பல்கலைக்கழகங்களின் வேந்தராக இருக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. நாடாளுமன்ற தேர்தல் விரைவில் வர உள்ளது.

அதில் ஒன்றிய பா.ஜ.வின் சர்வாதிகார போக்கை வீழ்த்த இம்மாநாடு சூளுரைத்தது. மாநாட்டில் படை திரண்ட பட்டாளமாய் பங்கேற்ற லட்சக்கணக்கான இளைஞர்களை பார்க்கும்போது, பாசிச பா.ஜ. ஆட்சியை வீழ்த்த தி.மு.க. இளைஞரணி, முன்கள போர்வீரர்களாக களம் காண்பது தெரிகிறது. நாடாளுமன்ற தேர்தலில் 40 தொகுதிகளிலும் வெற்றிக்கனியை இந்த பட்டாளம் பறித்து தரும் என்ற நம்பிக் கையும் மிளிர்கிறது.

இவ்வாறு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளது.